**+2 கணக்குப்பதிவியல் காலாண்டுத்தேர்வு செப்- 18**
**சரியான விடை 20X1=20**

1. (அ) பொறுப்பு
2. (ஆ) முதலிலிருந்து
3. (ஆ) இலாப நட்ட க/கு
4. (ஆ) மொத்த கடனாளிகள் க/கு
5. (ஆ) ரூ 2710
6. (இ) 2 : 1
7. (இ) பணம் மற்றும் அலகுகளின் எண்ணிக்கை
8. (இ) ரூ 2 18 000
9. (அ) சொத்து தேய்வடைவதால்
10. (ஆ) 1500
11. (அ) 20000
12. (அ) மொத்த லாபம் (ம) மொத்த விற்பனை
13. (இ) சதவீதம்
14. (அ) எதிர்
15. (அ) தொடக்க முதல்
16. (இ) நிதிநிலையை
17. (இ) கூற்று 1 மற்றும் கூற்று 2 இரண்டும் சரி
18. (இ) சொத்தின் ஏட்டு மதிப்பில்
19. (ஈ) நிதி நிலை அறிக்கை
20. (அ) ரொக்கத் திட்டப்பட்டியல்

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. சரிக்கட்டுப் பதிவு** இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சேர்க்கப்பட வேண்டிய சரிக்கட்டுதல்களை கணக்கேடுகளில் கொண்டுவருவதற்கு செய்யப்படும் குறிப்பேட்டுப் பதிவுகள் சரிக்கட்டுப் பதிவுகள் எனப்படும்.

**22. நிலையறிக்கை :** இருப்பு நிலைக்குறிப்பு போன்றது. சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளுக்கிடையேயான வேறுபாட்டின் காரணமாக முதலை அறிய தயாரிக்கப்படுவது.

**23. குறைந்த செல் மதிப்பு முறை:** இந்த முறையில் சொத்தின் குறைந்த செல் இருப்பு மீது நிலையான விகிதம் ஒவ்வொரு ஆண்டும் தேய்மானமாக கணக்கிடப்படுகிறது. இம்முறையில் தேய்மானம் ஆண்டுதோறும் குறையும்.

**24. கணக்கு மூலம் செலுத்த வேண்டியவைகள்:** பற்பல கடனீந்தோர் மற்றும் செலுத்துதற்குரிய மாற்றுச் சீட்டு ஆகியவை உள்ளடங்குவதாகும்.

**25. திட்டபட்டியல் இலக்கணம்:** எதிர்காலத்தில் நிகழக்கூடிய வரவு மற்றும் செலவுகளை உள்ளடக்கிய கணக்காகும் - லாங்மென் வணிகவியல்சார்ஆங்கில அகராதி

**26. .ஜனவரிக்கான ரொக்கத்திட்டப்பட்டியல்**

| | ஜனவரி ரூ |
|---|---|
| தொடக்க ரொக்கயிருப்பு | 9000 |
| கூட்டுக.(பெறுதல்கள்) | 14000 |
| | 23000 |
| கழிக்க (செலுத்துதல்கள்) | 10000 |
| **இறுதிரொக்கயிருப்பு** | **13000** |

**27. நிலைச்சொத்து விற்பனை விகிதம் காண்க**

நிலைச்சொத்துவிற்பனை விகிதம் = $\frac{\text{விற்பனை}}{\text{நிலைச்சொத்து} - \text{தேய்மானம்}}$

$= \frac{45000}{150000} = \frac{45}{150} =$ **0.3 மடங்கு.**

**28.** தேய்மானத்தொகை = $\frac{\text{சொத்தின் அடக்க விலை - இறுதி மதிப்பு}}{\text{பயனளிப்புகாலம்}}$

$= \frac{28000 - 2000}{5} =$ ரூ5200

**29. விடுபட்ட தகவலை காண்க:**

| | ரூ |
|---|---|
| இறுதி முதல் | 32000 |
| (+) எடுப்பு | 4800 |
| | 36800 |
| (-) கூடுதல் முதல் | 8000 |
| | 28800 |
| **(-) தொடக்க முதல்** | **19200** |
| இலாபம் | 9600 |

**30. சரிகட்டப்பதிவு :**

| நாள் | விவரம் | | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| | இறுதிசரக்கிருப்பு க/கு | ப | 250000 | |
| | வியாபார க/கு | | | 250000 |
| | (இறுதிசரக்கிருப்பு குறித்து) | | | |

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X3=21**

**31.குறிப்பு வரைக 1. வியாபார க/கு** மொத்த இலாபம் அல்லது மொத்த நட்டம் அறிய தயாரிக்கப்படுவது. அடக்கவிலை/உற்பத்தி விலை அறிய தயாரிக்கப்படுவது. இதில் நேரடிச் செலவுகள் மட்டுமே பதியப்படும். **2. இ / ந க/கு:** நிகர லாபம் அல்லது நிகர நட்டம் அறிய தயாரிக்கப்படுவது. விறப்பனை விலையை அறிய தயாரிக்கப்படுவது. இதில் மறைமுக செலவுகள் மட்டுமே பதியப்படுகின்றன. **3. இருப்புநிலைக்குறிப்பு:** இது நிதிநிலைஅறிக்கை எனப்படும். இதில் சொத்துக்கள் பொறுப்புகள் பதியப்படும். நிறுவனத்தின் நிதி நிலையை இதன் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**32. ஒற்றைபதிவுமுறையின் குறைபாடுகள் (3) :** 1.இருப்பாய்வு தயாரிக்க முடியாது. 2.துல்லிய லாபம் கண்டறிய முடியாது. 3.உண்மையான நிதிநிலையை அறிய முடியாது. 4.வரிவிதிக்கும்அதிகாரிகள் ஏற்பதில்லை.5.கடன் பெறுவதில் இடர்பாடு.

**33. தேய்மானம் ஏற்படுவதற்கான புறக் காரணங்கள் விளக்கு: 1.வழக்கொழிவு:** புதியகண்டுபிடிப்புகள் முன்னேறிய செய்முறைகள் தொழில் நுட்ப வளர்ச்சி போன்றவை காரணமாக பழைய சொத்துகள் பயனற்றவை ஆகின்றன. 2.**காலப்போக்கு:** சொத்துக்களை பயன்படுத்தாவிட்டாலும் பருவமாற்றம் காற்று மழை போன்ற இயற்கை காரணிகளால் மதிப்பு குறைகிறது. 3.**காலநிர்ணயம்:** குத்தகை பதிப்புரிமை தனியுரிமை போன்றவை குறிப்பிட்ட காலத்திற்கு பெறப்படுகின்றன.குறிப்பிட்ட காலம் கடந்த பிறகு இவ்வகை சொத்துகள் மதிப்பை இழந்து விடுகின்றன.

**34. நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் குறைபாடுகள் (3)** 1. இந்த ஆய்வு இது நாள் வரையில் என்ன நடந்தது என்பதை எடுத்துரைக்குமே தவிர, எதிர்காலத்தைப் பிரதிபலிக்காது. 2. இது விலையில் ஏற்பட்ட மாற்றத்தினைக் கருத்தில் கொள்வது இல்லை. 3. நிதிநிலை ஆடீநுவில் பணச் சார்புடைய கருத்துகள் மட்டுமே கருத்தில் கொள்ளப்படுகின்றன. மாறாக தரச் சார்புடையவைகள் நிராகரிக்கப்படுகின்றன. 4. நிதிநிலை அறிக்கையின் சரித்தன்மையைப் பொறுத்தே ஆய்வு முடிவு இருக்கும். 5. ஆய்வு முடிவைக் காண்பதற்கான ஒரு வழிமுறையே தவிர, அதுவே முடிவல்ல. 6. பல்வேறு

நிறுவனங்கள் மாறுபட்ட கணக்கியல் செயல்முறைகளை பின்பற்றுவதன் காரணமாக தரமான ஒப்பு நோக்கு ஆய்வு மேற்கொள்ள முடியாது.

**35.ரொக்கத் திட்டப்பட்டியலில் ஒரு மாதத்தின் இறுதி ரொக்கயிருப்பு அடுத்த மாதத்தின் தொடக்க ரொக்கயிருப்பு:** கணக்கியல் விதியின் படி ஆகும். இறுதி இருப்பு என்பது அந்த மாதத்தின் வரவில் செலவு நீக்கி மீதமுள்ள இருப்பானது அடுத்த மாத தொடக்கத்தில் கையிருப்பாக வைத்து செலவு செய்யப்படுகிறது.

**36. .(அ) சரிகட்டப்பதிவுகள் :**

| நாள் | விவரம் | பற்று | வரவு |
|---|---|---|---|
| | வாராக்கடன் க/கு ப | 2000 | |
| | பற்பலகடனாளிகள் க/கு | | 2000 |
| | (வாராக்கடன் போக்கெழுதியது குறித்து) | | |
| | இலாபநட்ட க/கு ப | 2000 | |
| | வாரகடன் க/கு | | 2000 |
| | (வாராகடன் லாப நட்ட க/கு மாற்றியது குறித்து) | | |
| | இலாபநட்ட க/கு ப | 5000 | |
| | வாராஐயகடன்ஒதுக்கு க/கு | | 5000 |
| | (வாராஐயகடன்ஒதுக்கு குறித்து) | | |
| | இலாபநட்ட க/கு ப | 950 | |
| | கடனாளிகள்மீதான தள்ளுபடி க/கு | | 950 |
| | (கடனாளிகள் மீதான தள்ளுபடி ஒதுக்கு குறித்து) | | |

**37. மொத்த கடனாளிகள் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| இருப்புகீ/கொ | 20400 | பெற்றரொக்கம் | 60800 |
| **கடன் விற்பனை** | **73400** | விற்பனைத்திருப்பம் | 5400 |
| | | இருப்பு கீ/இ | 27600 |
| | 93800 | | 93800 |

**மொத்த விறபனை = ரொக்க விற்பனை + கடன் விறப்பனை**

$= 56800 + 73400 =$ ரூ **130200**

**38.** .இயந்திரத்தின் அடக்க விலை=100000+100000

தேய்மானத்தொகை = $\frac{\text{சொத்தின் அடக்க விலை - இறுதி மதிப்பு}}{\text{பயனளிப்புகாலம்}}$

$= \frac{1100000 - 5000}{5} = \frac{1095000}{5} =$ ரூ **219000**

தேய்மான விகிதம் = $\frac{\text{தேய்மானத் தொகை}}{\text{சொத்தின் அடக்க விலை}} \times 100$

$= \frac{219000}{1100000} \times 100 = 19.9\%$

**39. மொத்த லாப விகிதம் =** $\frac{\text{மொத்த லாபம்}}{\text{விற்பனை}} \times 100$

**மொத்த லாபம் =விற்பனை –விறற பொருளின் அடக்கவிலை**

$= 300000 - 200000$

$= \frac{100000}{300000} \times 100 = \mathbf{33.3\%}$

**நிகர லாப விகிதம்** = $\frac{\text{நிகர லாபம்}}{\text{விற்பனை}} \times 100$

$= \frac{30000}{300000} \times 100 = \mathbf{10\%}$

**நடப்பு விகிதம் =** $\frac{\text{நடப்பு சொத்துகள்}}{\text{நடப்புபொறுப்புகள}}$

$= \frac{60000}{30000} = 2 : 1$

**40. ஜனவரிக்கான ரொக்கத்திட்டப்பட்டியல்**

| | ஜனவரி ரூ |
|---|---|
| தொடக்க ரொக்கயிருப்பு | 2500 |
| கூட்டுக.ரொக்க விற்பனை | 65000 |
| பெற வேண்டிய வட்டி | 1750 |
| | 69250 |
| கழிக்க கூலி | 23750 |
| ரொக்க கொள்முதல் | 27450 |
| | 54200 |
| **இறுதிரொக்கயிருப்பு** | **18050** |

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X3=21**

**41.அ. .(அ) சரிகட்டுப்பதிவுகள் :**

| நாள் | விவரம் | பற்று | வரவு |
|---|---|---|---|
| | வாராக்கடன் க/கு ப | 5000 | |
| | பற்பலகடனாளிகள் க/கு | | 5000 |
| | (வாராக்கடன் போக்கெழுதியது குறித்து) | | |
| | இலாபநட்ட க/கு ப | 5000 | |
| | வாராகடன் க/கு | | 5000 |
| | (வாராகடன் லாப நட்ட க/கு மாற்றியது குறித்து) | | |
| | இலாபநட்ட க/கு ப | 6000 | |
| | வாராஐயகடன்ஒதுக்கு க/கு | | 6000 |
| | (வாராஐயகடன்ஒதுக்கு குறித்து) | | |
| | இலாபநட்ட க/கு ப | 2850 | |
| | கடனாளிகள் மீதான தள்ளுபடி க/கு | | 2850 |
| | (கடனாளிகள் மீதான தள்ளுபடி ஒதுக்கு குறித்து) | | |

**31-3-2002 நாளுக்குரிய இலாப நட்டகணக்கு**

| ப | | | வ |
|---|---|---|---|
| வாராக்கடன் | 5000 | | |
| ஐயக்கடன் | 6000 | 11000 | |
| தள்ளுபடி ஒதுக்கு | | 2850 | |

**31-3-2002 க்கான இருப்பு நிலைக்குறிப்பு**

| **பொறுப்புகள்** | **சொத்துக்கள்** | **ரூ** |
|---|---|---|
| | பற்பலகடனாளிகள் | 125000 |
| | (-)வாராக்கடன் | 5000 |
| | | 120000 |
| | (-)ஐயக்கடன் | 6000 |
| | | 114000 |
| | (-)தள்ளுபடி ஒதுக்கு | 2850 |
| | | **111150** |

**41.ஆ. சரிக்கட்டுப்பதிவு**

முதலீடுகள்மீதான கூடியுள்ள வட்டி க/கு ப 100000

முதலீடுகள் மீதானவட்டி க/கு 100000

| **ப.** | **இலாப நட்ட கணக்கு** | **வ.** |
|---|---|---|
| | பெற்ற வட்டி | 400000 |
| | (+)கூடியுள்ள 100000 | **500000** |

**இருப்புநிலைக்குறிப்பு**

| பொறுப்புகள் | சொத்துகள் |
|---|---|
| முதலீடு 5000000 | |
| (+)கூடியுள்ள 100000 **5100000** | |

**42.அ. தொடக்கமுதல் கணக்கீடு:**

திரு.ராஜாவின் 31.03.2012ம்நாளையநிலையறிக்கை

| பொறுப்புகள் | | சொத்துகள் | |
|---|---|---|---|
| கடனீந்தோர் | 150000 | அறைகலன் | 150000 |
| **தொடக்க முதல்** | **1150000** | கடனாளிகள் | 750000 |
| | | சரக்கிருப்பு | 350000 |
| | | ரொக்கம் | 50000 |
| | 1300000 | | 1300000 |

**இறுதி முதல் கணக்கீடு:**

திரு.ராஜாவின் 31.03.2013ம்நாளையநிலையறிக்கை

| பொறுப்புகள் | | சொத்துகள் | |
|---|---|---|---|
| கடனீந்தோர் | 300000 | அறைகலன் | 150000 |
| **தொடக்க முதல்** | **1410000** | கடனாளிகள் | 1000000 |
| | | சரக்கிருப்பு | 500000 |
| | | ரொக்கம் | 60000 |
| | 1710000 | | 1710000 |

**இலாப நட்ட அறிக்கை :**

| | |
|---|---|
| இறுதி முதல் | 1410000 |
| கூட்டுக:எடுப்பு | 350000 |
| | 1760000 |
| கழிக்க:கூடுதல் முதல் | 150000 |
| | 16100000 |
| கழிக்க:தொடக்கமுதல் | 1150000 |
| **இலாபம்** | **460000** |

**42.ஆ. பற்பல கடனாளிகள் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| இருப்புகீ/கொ | 100000 | பெற்றரொக்கம் | 590000 |
| **கடன் விற்பனை** | **575000** | அளித்த தள்ளுபடி | 5000 |
| | | விற்பனைத்திருப்பம் | 10000 |
| | | இருப்பு கீ/இ | 70000 |
| | 675000 | | 675000 |

**மொத்த கடனாளிகள் = 50000+575000=625000**

**பற்பல கடனீந்தோர் கணக்கு**

| | | | |
|---|---|---|---|
| செலுத்திய ரொக்கம் | 40000 | இருப்புகீ/கொ | 65000 |
| பெற்ற தள்ளுபடி | 3000 | | |
| கொள்முதல்திருப்பம் | 6000 | | |
| இருப்பு கீ/இ | 50000 | **கடன் கொள்முதல்** | 34000 |
| | 99000 | | 99000 |

**மொத்த கடனீந்தோர் = 34000+25000=59000**

| **43.அ.இருப்புநிலைக்குறிப்பு** | **நிலை அறிக்கை** |
|---|---|
| வியாபாரத்தின் நிதி நிலையை அறிவது | வியாபாரத்தின் முதலினை அறிவது |
| இரட்டைப் பதிவு முறை பின்பற்றப் படுகையில் இருப்பு நிலைக் குறிப்பு தயாரிக்கப்படுகிறது. | ஒற்றைப் பதிவு முறை பின்பற்றப்படுகையில் நிலை அறிக்கை தயாரிக்கப்படுகிறது |
| முழுவதும் பேரேட்டுக் கணக்குகளின்அடிப்படையில் இருப்பு நிலைக் குறிப்பு தயாரிக்கப்படுகிறது. | சில பேரேட்டுக் கணக்குகள் மற்றும் மதிப்பீடுகள் அடிப்படையில் நிலை அறிக்கை தயாரிக்கப்படுகிறது. |
| இருப்புநிலைக் குறிப்பு நம்பத் தகுந்தது. | நிலை அறிக்கை நம்பத் தகுந்தது அல்ல. |
| நடவடிக்கைகளின் இரு தன்மைகளும்முழுமையாகப் பதியப்படுவதால்,தகவல்கள் விடுபட வாய்ப்பு இல்லை. | கணக்குகள் முழுமையற்று இருத்தலால் தகவல்கள் விடுபட வாய்ப்பு உண்டு. |

**43.ஆ. தேய்மானம் நீக்கவேண்டியதன் தேவைகள் :** **1.சரியான இலாபம் அல்லது நட்டம் கண்டறிய:** ஒவ்வொரு கணக்காண்டிலும் சரியான நிகர இலாபம் அல்லது நிகர நட்டம் கண்டறிய தேய்மானம் ஒரு செவாகக் கருதப்பட்டு வருவாயில் சரி செய்ய வேண்டும். **2.உண்மையான நிதிநிலையை உணர்த்த:** நிலைச்சொத்துகளின் உண்மையான மதிப்பிலிருந்து தேய்மானம் நீக்கப்படவில்லையெனில் இருப்புநிலைக் குறிப்பு சொத்துகளின் மதிப்பை அதிகப்படுத்திக் காட்டும். அத்தகைய நிலையில் இருப்புநிலைக் குறிப்பு உண்மையான நிதி நிலையைக் காட்டுவதாக அமையாது எனவே இருப்பு நிலைக் குறிப்பு உண்மையான நிதிநிலையை உணர்த்த வேண்டுமெனில் அதில் இடம்பெற்றுள்ள சொத்துகளின் உண்மையான மதிப்பிலிருந்து தேய்மானம் கழிக்கப்பட்டு காட்டப்பட்டிருக்க வேண்டும் **3.உண்மையான உற்பத்திச் செலவைக் கண்டறிய:** பொருள்களின் உண்மையான உற்பத்திச் செலவைக்கண்டறிய நிலைச் சொத்துகளின் மீதான தேய்மானம் விலக்கப்பட்டிருக்க வேண்டும் **4.சட்டத் தேவைகளைப் பின்பற்ற:** நிறுமங்கள் சட்டம் 1956 பிரிவு 205(1)-ன் படி பங்காதாயம் அறிவிப்புக்கு முன்பாக நிறுமங்கள் கட்டாயமாக நிலைச் சொத்துகளின் மீதான தேய்மானத்தை விலக்கியிருத்தல் வேண்டும். **5.பழைய நிலைச் சொத்துகளுக்குப் பதிலாக புதிய நிலைச்சொத்துகளை இடம்பெறச் செய்ய:** பழயை நிலைச் சொத்துகளை பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுகையில் புதிய நிலைச் சொத்துகளைப் நிறுவனத்தில்இடம்பெறச் செய்ய தேய்மானம் நீக்குதல் அவசியமாகிறது.

**44.அ. அகமது பிரதர்ஸ் நிறுவன ஏடுகளில்**

**ப. இயந்திர க/கு வ.**

| நாள் | விவரம் | தொகை | நாள் | விவரம் | தொகை |
|---|---|---|---|---|---|
| 1-4-10 | வங்கிக/கு | 600000 | 31-3-11 | தேய் | 120000 |
| | | | | இருப்பு கீ/இ | **480000** |
| | | 600000 | | | 600000 |
| 1-4-11 | இருப்பு கீ/இ | 480000 | 31-3-12 | தேய் | 120000 |
| | | | | இருப்பு கீ/இ | **360000** |
| | | 480000 | | | 480000 |
| 1-4-12 | வங்கிக/கு | 360000 | 31-3-13 | தேய் | 120000 |
| | இ /ந க/கு **(இலாபம்)** | **260000** | | வங்கி க/கு | 500000 |
| | | 620000 | | | 620000 |

**தேய்மான கசு**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 31-3-11 | இயந்திரக/கு | 120000 | 31-3-11 | லாபநட்டக/கு | 120000 |
| | | 120000 | | | 120000 |
| 31-3-12 | இயந்திரக/கு | 120000 | 31-3-12 | லாபநட்டக/கு | 120000 |
| | | 120000 | | | 120000 |
| 31-3-13 | இயந்திரக/கு | 120000 | 31-3-12 | லாபநட்டக/கு | 120000 |
| | | 120000 | | | 120000 |

**44.ஆ. நடப்பு விகிதம்** $= \frac{\text{நடப்பு சொத்து}}{\text{நடப்பு பொறுப்பு}}$

$= \frac{80000}{50000} =$ **1.6:1**

**நிலைச்சொத்து விற்பனைவிகிதம்** $= \frac{\text{விற்பனை}}{\text{நிலைச்சொத்துக்கள்}}$

$= \frac{480000}{120000} =$ **4 மடங்கு**

**புறஅக பொறுப்புகள்விகிதம்** $= \frac{\text{மொத்தநிண்டகாலக்கடன்}}{\text{பங்குதாரர் நிதி}}$

$= \frac{\text{கடனீட்டுப்பத்திரம்}}{\text{பங்குமுதல் + காப்புகள்}}$

$= \frac{30000}{100000+20000} =$ **0.25:1**

உரிமையாளர் விகிதம் = பங்குதாரர் நிதி / மொத்த புலனாகும் சொத்துக்கள்

= 120000 / நிலைச்சொத்து+நடப்பு சொத்து

= 120000 / 200000 = **0.6:1**

**45.அ. மியர்லினின் 31.03.2017 வியாபாரலாபநட்ட க/கு**

| | | | |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 10200 | விற்பனை | 72000 |
| கொள்முதல் | 75000 | இறுதிசரக்கிருப்பு | 50000 |
| சுங்கவரி | 3000 | | |
| கூலி + கொடுபட800+200 | 1000 | | |
| **மொத்தலாபம்கீ.இ** | **32800** | | |
| | 122000 | | 122000 |
| கணிப்பொறி தேய் | 2000 | மொத்தலாபம்கீகொ | 32800 |
| | | எடுப்பு மீது வட்டி | 200 |
| | | பெற்ற வட்டி2000 | |
| | | (-) முகூபெவ 1000 | 1000 |
| **நிகர லாபம் கீ/இ** | **32000** | | |
| | 34000 | | 34000 |

**மியர்லினின் 31.03.2017 இருப்புநிலைக்குறிப்பு**

| பொறுப்புகள் | | சொத்துகள் | |
|---|---|---|---|
| முதல் 44000 | | பெ.மா.சீ. | 5000 |
| நிகரலாபம் 32000 | | | |
| 76000 | | கணிப்பொறி 20000 | |
| (-)எடுப்பு 4000 | | (-) தேய்மானம் 2000 | 18000 |
| 72000 | | | |
| (-) எமீவ 200 | 71800 | இறுதிச்சரக்கிருப்பு | 50000 |
| கொடுபடவேண்டியகூலி | 200 | | |
| முகூபெற்ற வட்டி | 1000 | | |
| | 73000 | | 73000 |

| **45.ஆ. விவரம்** | **பற்று ரூ** | **வரவு ரூ** |
|---|---|---|
| இறுதிசரக்கிருப்பு க/கு ப.<br>வியாபார க/கு | 600000 | <br>600000 |
| முதல்மீதுவட்டி க/கு ப.<br>முதல் க/கு<br>**மாற்றுப்பதிவு**<br>லாப நட்ட க/கு ப.<br>முதல்மீதுவட்டி க/கு | 96000<br><br><br>96000 | <br>96000<br><br><br>96000 |
| பெற்ற வாடகைக/கு ப.<br>முன்கூட்டிபெற்றவாடகை க/கு | 5000 | <br>5000 |
| கூடியுள்ள வட்டி க/கு ப.<br>வட்டி க/கு | 2000 | <br>2000 |
| முன்கூட்டி செலுத்திய காப்பீடு க/கு ப.<br>காப்பீட்டு முனைம க/கு | 1000 | <br>1000 |
| கூலி க/கு ப.<br>கொடுபடவேகூலி க/கு | 15000 | <br>15000 |

**46.அ. 2014 ஆக செப் மார்ச் மாத ரொக்கதிட்டப்பட்டியல்**

| விவரம் | ஆக | செப் |
|---|---|---|
| தொடக்க ரொக்கயிருப்பு | 80000 | 291000 |
| **(+)**ரொக்க பெறுதல்கள் | | |
| ரொக்க விற்பனை | 325000 | 475000 |
| வாடிக்கையாளர்பெறவேண்டியது | 275000 | 345000 |
| பெற வேண்டியப பங்காதயம் | 16000 | |
| மொத்தரொக்கபெறுதல்கள் | 696000 | 1111000 |
| (-)ரொக்கசெலுத்துதல்கள் | | |
| ரொக்க கொள்முதல் | 200000 | 300000 |
| சரக்களித்தோருக்குஅளித்தது | 145000 | 245000 |
| செலுத்த வேண்டிய் கழிவு | --- | 270000 |
| செலவுகள் | 60000 | 70000 |
| மொத்தரொக்கசெலுத்துதல்கள் | 405000 | 885000 |
| **இறுதிரொக்கஇருப்பு** | **291000** | **226000** |

**46.ஆ. 2005 ஜீன் ஜீலை மாத ரொக்கதிட்டப்பட்டியல்**

| விவரம் | ஜீன் | ஜீலை |
|---|---|---|
| தொடக்க ரொக்கயிருப்பு | 40000 | 145500 |
| **(+)**ரொக்க பெறுதல்கள் | | |
| ரொக்க விற்பனை | 162500 | 237500 |
| வாடிக்கையாளர்பெறவேண்டியது | 137500 | 172500 |
| பெற வேண்டியப பங்காதயம் | 8000 | |
| மொத்தரொக்கபெறுதல்கள் | 348000 | 555500 |
| (-)ரொக்கசெலுத்துதல்கள் | | |
| ரொக்க கொள்முதல் | 100000 | 150000 |
| சரக்களித்தோருக்குஅளித்தது | 72500 | 122500 |
| செலுத்த வேண்டிய் கழிவு | --- | 135000 |
| செலவுகள் | 30000 | 35000 |
| மொத்தரொக்கசெலுத்துதல்கள் | 202500 | 442500 |
| **இறுதிரொக்கஇருப்பு** | **145500** | **113000** |

**47.அ. இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது வாராக்கடன் வாராஐயக்கடன் ஒதுக்கு மற்றும் கடனாளி மீதான தள்ளுபடி ஒதுக்கு உருவாக்கப்பட வேண்டியது அவசியம்.**

ஏனெனில் இறுதிக் கணக்கு தயாரிக்கும் போது துல்லியமான இலாப நட்டம் அறிய வாரா கடனும் ஐயக்கடனும் உருக்குவாவது அவசியம்.

மேலும் திடமான கடனாளிகளை உற்சாகப்படுத்தி விரைவாக தமது கடனை அடைப்பதற்கு அவர்களுக்கு தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குதல் அவசியம்.

**47.ஆ. ஒரு நிலைச் சொத்திற்கு தேய்மானம் நீக்குதல் அவசியம் வேண்டும்.**

ஏனெனில் அப்போது தான் சொத்தின் உண்மையான மதிப்பு நமக்கு தெரியும்

நான் குறைந்த செல் இருப்பு முறை தேய்மான முறை தான் பரிந்துரைப்பேன்.

ஏனெனில் வரிவிதிக்கும் அதிகாரிகள் இம் முறையை தான் ஏற்றுக் கொள்கிறார்கள்.